Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 241/2020 PW-6**

Name : செழியன்
Father / Husband name : மாணிக்கம்
Village : சென்னை
Age : 51
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 07.01.2026

Accused absent. Petition u/s 317 CrPC filed and allowed. Defence counsel present.

**முதல் விசாரணை**

நான் தனியார் கம்பெனியில் வேலை செய்கிறேன். வழக்கில் இறந்துபோன மாணிக்கம் எனது அப்பா. அ.சா.1 சகுந்தலா எனது அம்மா. அ.சா.2 தனசேகர் எனது கார் ஓட்டுநராக வேலையில் இருந்தார். சாட்சி அரிகரசுதன் எனது அக்கா மகன். அ.சா.3 எனது தங்கையின் கணவர். 28.10.2019 அன்று காலை சுமார் 09.30 - 10.00 மணியளவில் சென்னையில் எனது வீட்டிலிருந்து தேவபாண்டுலத்திலுள்ள எங்களின் ஊருக்கு TN 10 J 5835 என்ற ஸிவிப்ட் காரை தனசேகர் ஓட்ட எனது அப்பா, அம்மா ஆகியோர்கள் கிளம்பினார்கள். அன்றையதினம் மதியம் சுமார் 1 மணியளவில் எனது அக்கா சுமதி போன் செய்து சாரம் ஊரிலிருந்து யாரோ போன் செய்து விபத்து என சொன்னதாக சொன்னார். நான் எனது அம்மாவிற்கு போன் செய்தபோது கார் விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், அப்பாவிற்கு அடிப்பட்டதாகவும், திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு செல்வதாகவும் சொன்னார். நானும் எனது மனைவி அனுராதாவும் உடனே கிளம்பி திண்டிவனத்திற்கு வரும்போது சாரம் கிராமத்திற்கு அருகே வரும்போது நெடுஞ்சாலையில் ரெட்டியார் மில்லிற்கு எதிரில் ஒரே திசையில் காரும், TN 69 S 6383 லாரியும் விபத்தாகி நின்றிருந்தது. நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது எனது அம்மா சுயநினைவுடன் இருந்தார், அப்பா வரும்

வழியில் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் சொன்னார்கள். கார் ஓட்டுநர் சுமார் 20 நிமிடம் கழித்து பேசியபோது லாரி தவறான பாதையில் திடீரென திரும்பியதால் விபத்தானதாக கூறினார். பின்னர் நான் ஒலக்கூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். எனக்கு முன்பாகவே எனது அம்மா புகார் கொடுத்திருந்தர். காவல் நிலையத்தில் விபத்து ஏற்படுத்திய லாரியின் ஓட்டுநரை காவல் நிலையத்தில் அடையாளம் காட்டினார்கள். அவரின் பெயர் சிவக்குமார். அவரை பார்த்தால் தற்போது அடையாளம் காட்ட இயலும். திண்டிவனம் அரசு மருத்துவமனையில் 29.10.2019 ம் தேதி எனது அப்பாவின் பிரேதத்தின் மீது போஸ்ட் மார்டம் செய்து கொடுத்தார்கள். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, பாதி விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது, விபத்து நடந்தபிறகு நேரடியாக வந்துவிட்டேன். விபத்து பற்றி கேள்விபட்டு வந்தேன் என்றால் சரிதான். எனது அம்மா எத்தனை மணிக்கு புகார் கொடுத்தார் என்று தெரியாது என்றால் சரியல்ல, 3.30 - 04.00 மணியளவில் கொடுத்ததாக சொன்னார். சாரத்தில் எந்தயிடத்தில் விபத்து நடந்தது என்று குறிப்பிட்டு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும், விபத்து நடந்த பகுதியை நான் பார்த்தேன். எவ்வளவு நேரம் கழித்து விபத்து நடந்தயிடத்தை பார்த்தேன் என்றால் மாலை சுமார் 4 மணியளவில் பார்த்தேன். விபத்து சாலையில் நடந்தது என்றால் சரிதான். நான் வந்து பார்க்கும்வரையில் பைபாஸ் சாலையில் விபத்து நடந்த வாகனங்கள் இருந்தது என்றால் சரிதான், ஓரமாக இருந்தது. நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல.

2. வாகனங்கள் விபத்து நடந்தயிடத்தில் நிறுத்திவைத்திருந்தால் போக்குவரத்து நெரிசல் இருக்கும், காவல் நிலையத்திற்கு எடுத்துச்சென்றார்கள் என்றால் சரியல்ல. எனக்கு போன் வரும்போது எங்கிருந்தேன் என்றால் சென்னையில் இருந்தேன்.

விபத்தில் சம்மந்தப்பட்ட கார் சென்னையிலிருந்து திருச்சி செல்லும் சாலையில் இருந்தது என்றால் சரிதான். காரின் முன்பக்கம் கண்ணாடி உடைந்து அப்பாவின் கழுத்தில் அறுத்துவிட்டதால் தான் இறந்துவிட்டார் என்றால் அதுவும் ஒரு காரணம், காரின் முன்பகுதி முழுவதும் சேதமாகிவிட்டது. நான் கொடுத்த புகார் மீது என்ன நடவடிக்கை எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள். அந்த புகாரின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். ஊருக்குள் இருந்த திடீரென லாரி திரும்பியதால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல, எதிர் திசையில் வந்தது. லாரி எங்கிருந்து வந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், காரின் எதிரில் வந்தது. காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 6.30 - 07.30 மணிக்கு சென்றேன். அதுவரையில் எதிரி காவல் நிலையத்தில் இருந்தார் என்றால் சரிதான்.

3. போலிசார் சொல்லி எதிரியின் பெயர் விவரம் தெரியும் என்றால் சரிதான். எதிரியை பற்றிய மற்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னை காவல் நிலையத்தில் விசாரித்தார்கள் என்றால் 28 ம்தேதி காவல் நிலையத்திலும், 29 ம் தேதி மருத்துவமனையிலும் விசாரித்தார்கள். அவ்வாறு விசாரிக்கும்போது தற்போது சொன்னை தான் சொன்னேன் என்றால் சரிதான். என்னை போலிசார் விசாரித்து கையால் எழுதிக்கொண்டார்களா என்றால் ஆமாம். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றால் ஆய்வாளர் மற்றும் இரண்டு காவலர்கள் விசாரித்தார்கள். எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் 06.45 - 07.00 மணிளவில் விசாரித்தார்கள். நானும் எனது அம்மா கொடுத்த புகார்களிலும் நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் சரிதான். இரண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள் என்றால் இல்லை, ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள்.

4. நான் கொடுத்த புகாரிலும், எனது அம்மா கொடுத்த புகாரிலும் லாரியின் ஓட்டுரை பார்த்ததாகவும், ஓடிவிட்டதாகவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால்

நான் விபத்து நடந்தபோது அங்கில்லை. காவல் நிலையத்திற்கும், சம்பவயிடத்திற்கும் நான் செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தார் அம்மா எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்று சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல, 03.30 - 04.00 மணிக்கு புகார் கொடுத்தார். முதல் விசாரணையில் சொல்லிய விவரங்களை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வேறு ஒரு வாகனம் ஏற்படுத்திய விபத்திற்கு இந்த வாகனத்தின் மீது பொய்யான புகார் கொடுத்து, பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 241/2020 PW-7**

Name : குப்புசாமி
Father / Husband name : ஏழுமலை
Village : பிரம்மதேசம்
Age : 35
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 07.01.2026

Accused absent. Petition u/s 317 CrPC filed and allowed. Defence counsel present.

**முதல் விசாரணை**

நான் சொந்தமான டிப்பர் லாரி வைத்து ஓட்டுரராக வேலை செய்கிறேன். TN 69 S 6383 என்ற வாகனம் என்னுடையது. கடந்த 2019 ம் ஆண்டு மேற்படி லாரியை எனது ஓட்டுநர் சிவக்குமார் மணல் ஏற்றுவதற்காக சென்னை மார்க்கமாக சொக்கங்தாங்கல் இருந்து ஓட்டிச்சென்றார். அன்றையதினம் மதியம் 12.40 - 01.00 மணியளவில் போன் வந்தது, அதில் லாரி சாரம் மில்லிற்கு முன்பாக விபத்தானதாக சொன்னார்கள். பின்னர் அன்றையதினம் மதியம் 3 மணியளவில் சம்பவயிடத்திற்கு வந்து பார்த்தபோது லாரியும், காரும் விபத்தாகியிருந்தது. இந்த விபத்தில் காரில் வந்த ஒருநபர் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். பின்னர் ஒருநாள் லாரியை திண்டிவனம் மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்த எடுத்துச்சென்றேன். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை. விபத்து சமயத்தில் சுமார் 6 மாதமாக சிவக்குமார் என்னிடம் லாரி ஓட்டினார். காவல் நிலையத்தில் மேற்படி வாகனத்தின் ஆர்சிபுக்கின் நகல் கொடுத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு யார் தகவல் சொன்னது என்று தெரியாது என்றால் சரிதான். எனது போன் நெம்பர் அவர்களுக்கு எப்படி கிடைத்தது என்றால் லாரியில் உள்ளது. சென்னையில் எந்த ஊருக்கு லாரி சென்றது என்றால் நினைவில்லை, சாட்சி

பின்னிட்டு திருவங்காடு என்று கூறினார். NH 45 சாலை இருவழிச்சாலை என்றால் சரிதான். அதில் சென்னைக்கு செல்ல சென்னை மார்க்கமாக உள்ள சாலையில் செல்வார்கள் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட இடம் குறித்து துள்ளியமாக சொல்லயியலாது என்றால் சரிதான். விபத்து சென்னையிலிருந்து திண்டிவனம் சாலையில் நடந்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சம்பவயிடம் சென்று பார்க்கும்போது சாலையிலிருந்து தள்ளி சுமார் 50மீ தொலைவில் வாகனங்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். இந்த விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாகனங்கள் எந்த திசையில் மோதிக்கொண்டது என்று தெரியாது என்றால் சரிதான். யார் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் தெரியாது என்றால் சரிதான். கார் கண்ணாடி உடைந்து அதிலிருந்த நபர் முன்னோக்கி விழுந்து இறந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் அங்கிருந்தவர்கள் சொன்னார்கள்.

2. கார் ஓட்டுநரின் கவனக்குறைவால் சென்னை நோக்கி சென்ற லாரியின் மீது மோதி விபத்து நடந்தது என்றால் தெரியாது. வேறு வாகனம் ஏற்படுத்திய விபத்திற்காக எனது லாரியின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. லாரி என்னுடையதென்றால் ஆர்சிபுக்கை இன்று தாக்கல் செய்திருப்பேன் என்றால் ஆர்சிபுக்கின் நகலை போலிசாரிடம் கொடுத்தேன், லாரி மற்றும் ஆர்சிப்புக்கை ஸ்ரீராம் பைனான்சில் கடன் தொகை கட்டதாதால் எடுத்துச்சென்றுவிட்டார்கள், அதனால் என்னிடம் இல்லை. எதிரியை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரருககு ஆதரவாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் ஓட்டுநராக வேலை செய்ததற்கு ஆவணம்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அதற்கு ஆவணம் இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.